# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1262/32 - 2002 නොවැම්බර් 15 වැනි සිකුරාදා - 2002.11.15

*1262/32 ஆம் இலக்கம் - 2002 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

*2002.09.01*

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைப் பிரிவு கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். அத்துடன் 2002.09.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

2. கணனிக் கற்கைப் பிரிவு (இதனகத்துப் பின்னர் “கற்கைப் பிரிவு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் (இது “பல்கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இணைந்திருத்தல் வேண்டும்.

3. கற்கைப்பிரிவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (இதனகத்துப் பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமையப் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு;

(ஆ) கற்கைப் பிரிவினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மீது, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கணனி அறிவியல், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்களின் கிளைகளில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உசாத்துணைக்கும் ஏற்பாடு செய்வதற்கு;

(இ) கணனி அறிவியல், தகவல், தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்கள் என்பவற்றில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடத்துவதற்கும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தும் துணைவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய வேறு நிபந்தனைகளைத்